**செய்தி வெளியீடு எண்: 269** **நாள்: 27.04.2019**

## செய்தி வெளியீடு

சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் பிறந்த நாள் ஆண்டுதோறும் அரசு விழாவாக சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் 168வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில் அரசு உயர் அலுவலர்கள், சென்னை மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (27.4.2019) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் பிறந்த தினமான ஏப்ரல் 27ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதன்படி, சர். பிட்டி. தியாகராயர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு இன்று (27.04.2019) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப., உட்பட அரசு உயர் அலுவலர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர்கள் திரு.த.சரவணன் (நினைவகங்கள்), திரு.தா.மனோகரன் (மக்கள் தொடர்பு), திரு.அ.உமாபதி (பெருநகர சென்னை மாநகராட்சி), செயற்பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி திரு.முருகன், செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**